# கண்ணதாசன் பாடல்களில் கம்பராமாயணச் சிதறல்கள்

# Kambaramayana Scatterings in Kannadasan Songs

***முனைவர் வே. அகிலா***
தலைவர், தமிழ்த்துறை
தாசிம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி
கீழக்கரை

**Dr. V. Akila**
*Head, Tamil Department*
*Thasimbeevi Abdulkader College for Women*
*Keelakarai*

**ஆய்வுச் சுருக்கம்**

*இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகவும் திரையிசைப் பாடல்களின் அரசனாகவும் விளங்கியவர் சிறுகூடல்பட்டி பாட்டுக்குயில் கண்ணதாசன். இவர் ஆயிரக்கணக்கான திரையிசைப் பாடல்களையும், கவிதைகளையும் இயற்றியுள்ளதோடு. அநேக சிறுகதைகளையும், நாவல்களையும், நாடகங்களையும், உரை நூற்களையும் உருவாக்கி தமிழில் இலக்கிய உலகிற்கு இன்னொரு விடியலை ஏற்படுத்தியுள்ளார். பல இதழ்களில் முக்கியப் பொறுப்பில் பணியாற்றியதுடன் தன்னுடைய ரசனைக்கேற்ப படைப்புகளை வெளியிட சில இதழ்களை சொந்தமாக நடத்தியுள்ளார். திரைப்படத் தயாரிப்பாளர், திரைப்படபாடலாசிரியர், திரைப்பட வசனகர்த்தா, கவிஞர், அரசியல்வாதி என்று பன்முகப் பார்வையுடன் உலா வந்துள்ளார். இவரது பாடல்களில் தான் கற்றுணர்ந்த பிற இலக்கிய படைப்புகளின் கருத்துகளை பாமரரும் சுவைக்கும் பொருட்டு எளிமைப்படுத்தி வழங்கியுள்ளார். இவரது பாடல்களில் காணப்படும் கம்பராமயண சாரத்தின் ஒரு சில கருத்துகளை இக்கட்டுரையில் காணலாம்.*

***முக்கியச் சொற்கள்:***

*கண்ணதாசன், கம்பராமாயணம், திரையிசைப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், கம்பன் கழகம்*

**Abstract**

*Who was the unparalleled poet of the twentieth century and the king of screen songs; Sirukoodalpatti Pattukuyil Kannadasan. He has composed thousands of screen songs and poems. He has written many short stories, novels, plays and hundreds of texts and has created another dawn for the literary world in Tamil. He has been in charge of several magazines and owns a few magazines to publish his work to his liking. He has traveled extensively as a filmmaker, film songwriter, film narrator, poet and politician. Palmer has simplified the ideas of other literary works he has learned in his songs for the sake of taste. In this article you will find a few comments on the essence of Kambaramayana found in his songs.*

***Keywords:***

*Kannadasan, Kambaramayanam, Movie Songs, Philosophy Songs, Kamban Kazhagam*

**Citation**

Akila, V. “Kambaramayana Scatterings in Kannadasan Songs.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 48–53.

*https://doi.org/10.5281/zenodo.20136286*

**முன்னுரை**

*1949-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது கண்ணதாசனும் நாத்திகராக அக்கழகத்தில் இடம் பெற்றிருந்தார். அப்போது அண்ணா அவர்கள் கம்பனையும் கம்பராமாயணத்தையும் கேலி செய்வதைப் பார்த்து தானும் கம்பராமாயத்தைக் கற்று கம்பனை எள்ளி நகையாட வேண்டும் என்ற எண்ணத்துடன் கம்பனை விமர்சிப்பதற்காக கம்பராமாயணத்தையும் சமய கருத்துகளையும் ஆழ்ந்து படிக்க ஆரம்பித்த கண்ணதாசன் இறுதியில் கம்பனின் தமிழ்நடையில் கலந்து மயங்கி விட்டதாக கூறுகிறார். கம்பனது படைப்பை கற்ற கண்ணதாசன் அவரது படைப்புக்கு ஈடு இணை எதுவுமில்லை என்பதை உணர்ந்துகொண்டதோடு அதற்கு இணையாக மற்றொரு படைப்பை எவராலும் உருவாக்க இயலாது என்பதை,*

***“பத்தாயிரம் கவிதை***
***முத்தாக அள்ளிவைத்த***
***சத்தான கம்பனுக்கு ஈடு - இன்னும்***
***வித்தாக வில்லை என்றுபாடு”***

*என்ற பாடலின் வாயிலாகவும், கம்பராமாயணத்தின் புகழ் தலைமுறை தலைமுறையாய் நிலையத்து நிற்கும் என்பதை,*

***“காலமென்னும் ஆழியிலும்***
***காற்று மழை ஊழியிலும்***
***சாகாது கம்பனவன் பாட்டு - அது***
***தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு”***

*என்றும் பாடியுள்ளார்.*

**சொல்லாட்சி**

*கண்ணதாசன் இயற்றிய அநேகப் புகழ் பெற்ற பாடல்களில் கம்பனிடம் ரசித்த ஓசையையும் சொல்லாட்சிகளையும் கற்பனை நயத்துடனுன் அழகுணர்ச்சியுடனும் பதிவு செய்துள்ளார். கம்பராமாயணத்து பால காண்டம் அகலிகைப் படலத்தில், விசுவாமித்திரர் இராமனைப் புகழ்ந்து கூறும்போது, தாடகை என்ற அரக்கியை அழித்த போது உன் தோள் வலிமையைக் கண்டேன், அகலிகைக்கு பழைய வடிவத்தை கொடுத்த போது உன் கால் வலிமையும் கண்டேன். இனி இந்த உலகம் சிறப்புடன் நிலை பெற்று தர்மத்தின்படி இயங்கும் என்று கூறுகிறார். இதனை கம்பர்,*

***“இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்***
***இனி இந்த உலகுக்கெல்லாம்***
***உன் வண்ணம் அன்றி மற்றோர்***
***துயர் வண்ணம் உறுவது உண்டோ***
***மைவண்ணத்து அரக்கி போரில்***
***மழை வண்ணத்து அண்ணலே உன்***
***கைவண்ணம் அங்கு கண்டேன்***
***கால்வண்ணம் இங்கு கண்டேன்”***

*என்று பாடியுள்ளார். இப்பாடலின் வண்ணம் என்ற சொல்லை எடுத்துக்கொண்டு,*

***“பால்வண்ணம் பருவம் கண்டு***
***வேல் வண்ணம் விழிகள் கண்டு***

***மான் வண்ணம் நான் கண்டு வாடுகிறேன்***
***கண்வண்ணம் அங்கே கண்டேன்***
***கால் வண்ணம் இங்கே கண்டேன்***
***பெண்வண்ணம் நோய் கண்டு வாடுகிறேன்***

*என்ற பாடலை "பாசம்" என்ற திரைப்படத்தில் பதிவு செய்து உள்ளார். இப்பாடலில் கம்பனை போலவே வண்ணம் என்ற சொல்லாட்சியை கண்ணதாசனும் கையாண்டுள்ளமையை காணமுடிகிறது.*

**அழகுணர்ச்சி**

*இராமன் மிகுந்த அழகு பொருந்தியவன். இராமனுடைய உடல் அழகை ஒரு தடவை பார்த்து ரசித்தால் மீண்டும் மீண்டும் பார்க்கத்தூண்டும் தன்மையை உடையது. இராமனது தோள் அழகைப் பார்த்து ரசித்தவர்கள் கண்களை எடுக்காமல் தோள் அழகினையே ரசித்த வண்ணம் இருந்தனர். மேனியை பார்த்தவர்கள் மேனிஅழகையை ரசித்த வண்ணம் இருந்தனர் என்ற கூற்றை கம்பர்.*

***"தோள் கண்டார் தோளே கண்டார்***
***தொடு கழல் கமலம் அன்ன***
***தாள் கண்டாரும் அஃதே***
***வாள் கொண்ட கண்ணார் யாரே***
***வடிவினை முடியக்கண்டார்"***

*இவ்வடிகளில் பதிவு செய்துள்ளார். இக்கருத்தை அப்படியே கண்ணதாசனும்,*

***"தோள்கண்டேன் தோளே கண்டேன்***
***தோளிலிரு கிளிகள் கண்டேன்***
***வாள்கண்டேன் வாளே கண்டேன்***
***வட்டமிடும் விழிகள் கண்டேன்"***

*என்று பாடியுள்ளார். இப்பாடலில் கம்பர் கையாண்டுள்ளது போலவே கண்ணதாசனும் குறிப்புகளையும், சொற்களையும் கொண்டு அழகுணர்ச்சியை கையாண்டுள்ளமை காண முடிகிறது.*

**கருத்தொற்றுமை**

*இராவணனிடம் சீதையின் பேரழகினை சிறப்பித்தும், வர்ணித்தும் கூறி சீதையை கவர்ந்து வருமாறு ஆசையை தூண்டி விடுகிறாள் சூர்பப்னகை. அவள் கூறும் போது தேவர்கள் தம் தேவியரை எங்கெங்கு உறைய வைத்துள்ளனர் என்று பட்டியலிடுவதாக,*

***"பாகத்தில் ஒருவன் வைத்தான்***
***பங்கயத் திருந்த பொன்னை***
***ஆகத்தில் ஒருவன் வைத்தான்***
***அந்தணன் நாவில் வைத்தான்***
***மேகத்தில் பிறந்த மின்னை***
***வென்ற நுண் இடையை, நீயும்***
***மாகத் தோள் வீர? பெற்றால்***
***எங்ஙனம் வைத்து வாழ்தி"***

*என்ற பாடல் அடிகளை கம்பர் பதிவு செய்துள்ளார். இதில் சிவபெருமான் உமாதேவியை இடப்பக்கத்திலும், திருமால் இலக்குமி தேவியை மார்பிலும், பிரம்மன் சரஸ்வதி தேவியை*

*நாவிலும் வைத்து போற்றுவது போன்று சீதா தேவியை வைக்க இவ்விடம் ஒதுக்கி உள்ளாய் என்று கேட்கிறாள். இப்பாடலின் கருத்தை நன்கு புரிந்து கொண்ட கண்ணதாசன் அக்கருத்தை பிரதிப்பலிப்பதாக "வியட்நாம் வீடு" என்ற திரைப்படப் பாடலில்*

***"பரமசிவன் சக்தியை ஓர்***
***பாதியில் வைத்தார் - அந்தப்***
***பரமகுரு இரண்டு பக்கம் தேவியை வைத்தார்***
***பாற்கடலில் மாதவனோ***
***பக்கத்தில் வைத்தார் - ராஜா***
***பத்மனாபன் ராணியைத் தன்***
***நெஞ்சினில் வைத்தான்"***

*என்று பாடியுள்ளார்.*

**விதியின் செயல்பாடு**

*கம்பரது காப்பியத்தில் இடம் பெற்றுள்ள நம்பிக்கை சார்ந்த செய்திகளையும் கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில் சிறப்பாக பதிவு செய்துள்ளார். விதியின்படியே எல்லாம் நடைபெறுகிறது என்பதில் அதிகமான நம்பிக்கை கொண்டு செயல்பட்டவர் கம்பர் என்பதை அவரது படைப்பின் வழியே உணர முடிகிறது. இராமனை காட்டிற்கு அனுப்பிய காரணத்திற்காக கைகேயின் மீது சினம் கொண்டு காணப் பட்ட இலக்குவனிடம் இராமன்,*

***"நதியின் பிழையன்று***
***நறும்புனல் இன்மை அற்றே***
***பதியின் பிழையன்று***
***பயந்து நன்மைப் புறந்தாள்***
***மதியின் பிழையன்று***
***மகன் பிழையன்று மைந்த?***
***விதியின் பிழை: நீ இதற்கென்ன***
***வெகுண்ட தென்றான்"***

*என்ற பாடலின் மூலம் விதிவசத்தால் எல்லாம் நடைபெறுகிறது. எனவே எனக்கு நேர்ந்துள்ள துன்பத்திற்கு தாய், தந்தையர் செய்த தவறுகளோ அல்லது உடன்பிறந்தோர் செய்த தவறுகளோ காரணமல்ல என்று இராமன் கூறுவதாக கம்பர் படைத்துள்ள இப்பாடலை கண்ணதாசன்,*

***நதிவெள்ளம் காய்ந்து விட்டால்***
***நதி செய்த குற்றமில்லை***
***விதி செய்த குற்றம் அன்றி***
***வேறே யாரம்மா?"***

*என்று திரை இசை பாடலாய் பதிவு செய்துள்ளார்.*

**முடிவுரை**

*கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்பது பழமொழி அந்தக் கவி கற்றோர் மட்டுமே ரசிக்கும் எளிய திரையிசைப்பாடலாக தந்தவர் கண்ணதாசன். கம்பனது பாடல்களை தான் அநேக இடங்களில் எடுத்தாண்டிருப்பதை கண்ணதாசன் பல நேரங்களில் ஒப்புக்கொண்டுள்ளார். இதனை புதுச்சேரி கம்பன் கழக விழாவில்,*

***"கம்பன் கொடுத்த***
***கவிப் பிச்சை ஓரளவு***
***.......................................***
***தம்பிக்குக் கொஞ்சம்***
***தந்து வைத்தான் என்பதால்"***

*என்ற கவிதை மூலமாக கூறியுள்ளார். "கம்பன் என்றால் கட்டுத்தறியும் கவிபாடும்" கண்ணதாசன் என்றால் கடினமான கம்பராமயணப் பாடல்களும் எளிய கவியாகும் என்பதை கண்ணதாசனது பாடல்கள் மூலமாக உணரமுடிகிறது.*

**கலைச்சொற்கள்**

1. *ஆழி*
2. *ஊழி*
3. *மைவண்ணம்*
4. *கழல்*
5. *நறும்புனல்*
6. *கட்டுத்தறி*
7. *கேலி*
8. *நகைத்தல்*
9. *சொல்லாட்சி*
10. *கற்பனை*

**மேற்கோள் நூல்கள்**


1. *கண்ணதாசனின் தத்துவப்பாடல்கள்*
2. *கண்ணதாசனின் கொள்கைப் பாடல்கள்*
3. *கம்பராமாயணம் - கம்பன் கழகம் - சென்னை*
4. *கம்பராமாயணம் - பேரா.அ.ச.ஞானசம்பந்தன்*


## References


1. *Philosophical songs of Kannadasan*
2. *Kannadasan's policy songs*
3. *Kambaramayanam - Kamban Kazhagam - Chennai*
4. *Kambaramayanam – Prof.A.S. Gnanasampanthan*